


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற் கல்வி) பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில், தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ. சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!... முதல் பக்கத் தொடர்ச்சி!

நீதிக்கட்சி தொடங்கிய நாளினை யொட்டி, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**நம் உரிமைக்குரலின் உதயம்!**

**இந்த மண்ணின் மைந்தர்களுக்குக் கல்வி வேலைவாய்ப்பு அதிகாரத்தில் உரிய பங்கைப் பெற்றுத் தந்து, சமூகநீதியை நிலைநாட்டியே தீருவது என்ற #NonBrahminManifestoவைச் செயல்படுத்திக் காட்ட, நம் தாய் அமைப்பான நீதிக்கட்சி தலைதூக்கிய நாள் இன்று.**

**நீதிக்கட்சியின் நீட்சியே நம் #DravidianModel ஆட்சி எனத் தொடர்ந்து மெய்ப்பிப்போம்! சூழும் ஆரிய சூழ்ச்சிகளை எல்லாம் சுக்குநூறாக உடைத்தெறிவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி!

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும், குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் அல்லது சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்பலாம். இந்த மூன்றில் ஒன்றைதான் ஆளுநர் தேர்ந்தெடுக்க முடியுமே தவிர, ஒன்றிய அரசு கூறுவதுபோல் நான்காவதாக எந்த வாய்ப்பும் இல்லை என்று தெளிவாக விளக்கமளித்துள்ளது.

அரசியல் சாசனப்பிரிவு 200, 201ன் படி மசோதாக்களுக்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்க வேண்டும். இல்லையெனில் சட்டப்பேரவைக்கு மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்ப வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் காலவரம்பின்றி கிடப்பில் வைக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே அதிகாரம் இருப்பதாக திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. ஒரு மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

**அமைச்சரவையின் ஆலோசனைப்படியே ஆளுநர் செயல்பட வேண்டும்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அதன் அமைச்சரவையுமே முதன்மையான இடத்தில் இருப்பதாகவும், மசோதாக்கள் விவகாரத்தில் இடையூறு விளைவிக்கும் அணுகுமுறையை ஆளுநர்கள் மேற்கொள்ளக்கூடாது என்பதுடன், ஆளுநர் செயல்படாமல் இருந்தால் அரசியல் அமைப்பு, நீதிமன்றங்கள் அதனை ஆய்வு செய்யும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டதுடன், தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஏற்கனவே அளித்த தீர்ப்பில் உறுதியாக இருப்பதாக கூறி, குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்காமல் உச்சநீதிமன்றம் திருப்பி அனுப்பியது.

## கடலூர் மேற்கு மாவட்டம்

# விருத்தாசலம் நகரத்தில் தீவிர வாக்காளர் சரிபார்ப்பு பணி!

## அமைச்சர் சி.வி.கணேசன் ஆய்வு!

கடலூர். நவ. 21 -

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி விருத்தாசலம் நகர தி.மு.க சார்பில் ராமச்சந்திரன் பேட்டை பெரியார் சிலை அருகே இலவச சேவை மையத்தில் தீவிர வாக்காளர் சேர்ப்பு முகாம் நடைபெற்றது.

இதில் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து, வாக்குச்சாவடி பாக முகவர்கள் மற்றும் வட்ட செயலாளர்களிடம் வாக்கு சேகரிப்பு பணியை சிறப்பாகவும், விரை வாகவும் செய்து முடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். விருத்தாசலம் நகரம் 24, 25, 26, 27, 28 ஆகிய வார்டுகள் மற்றும் 260, 261, 256, 257, 258, 259 ஆகிய பாகம் எண்களுக்கான பகுதி வாக்காளர் சேர்ப்பு நடை பெற்றது.

முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இதில் விருத்தாசலம் நகர செயலாளர் க.தண்பாணி, விருத்தாசலம் வடக்கு ஒன்றிய செயலாளர் கனக. கோவிந்தசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர், விருத்தாசலம் நகர துணை செயலாளர் எஸ். இராமு, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் அன்சர் அலி, மாவட்ட பிரதிநிதி ஆட்டோ பாண்டியன், மாவட்ட தொழிலாளர் விவசாய அணி அமைப்பாளர் சரவணன், நெசவாளர் அணி துணை அமைப்பாளர் காந்தி, நகர இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி, ஒன்றிய விருத்தாசலம் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் இளைஞர் அணி துணை செயலாளர் தர்ம. மணிவேல், இளைஞரணி அமைப்பாளர் வசந்தகுமார், வட்ட செயலாளர்கள் பரந்தாமன், ராமச்சந்திரன் பேட்டை முருகன், மணலூர் முருகன், தகவல் தொழில்நுட்ப அணி நகர அமைப்பாளர் சத்யராஜ், கவுன்சிலர் அறிவழகி முருகன், முன்னாள் வட்ட செயலாளர்கள் ஆட்டோ ஆறுமுகம், துரைபாலு, கொளஞ்சிநாதன், வட்ட நிர்வாகிகள் வெங்கடேசன், கலியமூர்த்தி, விஜி, வீரமணி, சிம்பு ஆகிய நிர்வாகிகள் தீவிர வாக்காளர் சேர்க்கை பணியில் ஈடுபட்டனர்.

## தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள்

# தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திர மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்!

## தி.மு.க, வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம் 24112025 திங்கட்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், **கோவை, விமானநிலையம் அருகில், காளப்பட்டி ரோடு, ஓட்டன் ஜோன் கனெக்டிவ்ல்** எனது தலைமையில்;

தரையில் நடக்கும் தத்துவ நீரோட்டம், நினைத்ததை முடிக்கும் புயல்வேக செயல்திறன் கொண்ட கொங்கு மண்டல பொறுப்பாளர் **திரு. வி.செந்தில்பாலாஜி** அவர்கள் சிறப்புரையாற்றிட;

கோவை மாவட்டக் கழகச் செயலாளர்கள்/பொறுப்பாளர் தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், செந்தமிழ்செல்வன் மற்றும் மாநில வர்த்தகர் அணி நிர்வாகிகளான துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலை ராஜா, வி.ஜெயன், கோவை நா.முருகவேல், பி.டி.பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என்.தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் துணைச் செயலாளர்கள் ஐ.கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே.பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் கோவை மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்கள் பி.மாரிசெல்வன், ஏ.கே.வேலுச்சாமி, கே.கே.கண்ணன் வரவேற்புரையாற்றிட நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள்;
2. எஸ்.ஐ.ஆர் கவனப்படுத்துதல்
3. கழக ஆக்கப் பணிகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள்: 18.11.2025.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

## கோவை - மதுரை

# மெட்ரோ ரயில் திட்டங்களை முடக்கி ஒன்றிய அரசு வஞ்சித்துள்ளது!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் கண்டனம்!

திருச்சி, நவ. 21 -

ஒன்றிய அரசு கோவை மதுரை மெட்ரோ ரயில் திட் டங்களையும் முடக்கி வஞ்சித் துள்ளது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசி ரியர் கே.எம். காதர் மொகிதீன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது :

மெட்ரோ திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க மக்கள்தொகை

20 லட்சம் வரை தேவை என்றும் கோவை மற்றும் மதுரையில் 15 லட்சம் மக்கள்தொகை மட்டுமே இருப்பதால் அனு மதி கொடுக்க முடியாது என்று ஒன்றிய அரசு திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பியிருப்பதாககூறப்படுகிறது.

அதேசமயம் ஆக்ரா. போபால், தானே போன்ற



நகரங்களில் மக்கள் தொகை 20 லட்சத்திற்கும் குறைவாக இருந்தும் கூட அவை பாஜக ஆளும் மாநிலம் என்கிற ஒரே காரணத்தால் மெட்ரோ ரயில்வே திட்டத்திற்கு முழுமையான அனுமதி தரப் பட் டுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு விடுத்த வேண்டுகோளை பல மாதங்கள் கிடப்பில் போட்டு இப்போது இந்த இரண்டு பெரு நகரங்களுக்கு மெட்ரோ ரயில் அனுமதியை மறுத்து இருப்பது தமிழ் நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் வஞ்சிக்கும் செய லாகும்.

"கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது பாஜ கவை தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பதற்காக பழிவாங் கும் போக்கு"" இதனை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கடுமையாக கண்டிப்பதுடன் 21.11.2025 வெள்ளிக் கிழமை அன்று மதுரையில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் ஒன்றிய அரசைக் கண்டித்து நடத்தும் ஆர்ப் பாட்டத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பங்கு கொள்ளும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு பேராசி ரியர் கே.எம். காதர் மொகிதீன் அறிக் கையில் கூறப்பட் டுள்ளது.

# சென்னையில் விழிப்புணர்வு பிரச்சாரம்!

சென்னை,நவ.21–

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் சுகாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத் தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ஆண்டுதோறும் நவம்பர் 19ஆம் தேதி உலக கழிப்பறை தினமாக அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதி மக்களிடையே சுத்தம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் சிறப்பு அஞ்சல் தலையினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று முன்தினம் (19.11.2025) வெளியிட்டார். 5 ரூபாய்க்கான இந்த அஞ்சல் தலையில் ஆண், பெண், மாற்றுத்திறனாளி, மூன்றாம் பாலினத்தவர் படங்களுடன் Clean Sanitation For All – World Toilet Day 2025 (அனைவருக்குமான சுத்தம் சுகாதாரம் – உலக கழிவறை தினம் 2025) என்கிற வாசகங்களுடன் அமைந் துள்ளது.

இதனைத் தொடர்ந்து கழிவறை வளாகத்தில் கட்டணமில்லா பகுதி என்பதை குறிக்கும் வகையில் No Fee Zone என்கிற வாசகத்துடன் கூடிய விளம்பரப் பலகை, சுகாதாரப் பணியாளர்கள் அணிந்து கொள்ளும் பேட்ஜ் மற்றும் ஸ்டிக்கர்களை மேயர் வெளி யிட்டு வழங்கினார்.

மேலும், சுகாதாரப் பணியாளர்களுக்கு சீருடை, கையுறை, முகக்கவசம், தண்ணீர் குடுவை (Stainless Steel Water Bottle) அடங்கிய பாதுகாப்பு உபகரண தொகுப்புகளை வழங்கினார்.முன்னதாக, மேயர் அவர்களின் தலைமையில் உலக கழிப்பறை தின உறுதி மொழியினை அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராமேசுவரத்தில் பள்ளி மாணவி கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது குடும்பத்தினரை ராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.



திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நேருஜி கலையரங்கில் நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாநில அளவிலான விழாவில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில் கூட்டுறவு தன்னார்வாலர் படை உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். உடன் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ் , பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் , மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) மு.வீரப்பன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ6 , மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் , கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர்.க.சொ.இரவிச்சந்திரன், திருநெல்வேலி இணைப் பதிவாளர் ப.மு.முருகேசன் உட்பட கூட்டுறவு துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.